RAJ HOLDINGS

# The Cherian FOUNDATION

ஃபவுண்டேஷன் நிறுவிய நாள்: 11.03.2003

# எதிர்காலம் வளம்பெற மாற்றங்கள் புரிவோம்

ஜனவரி - டிசம்பர் 2012 | பகுதி : 1 இதழ் : 1

## செரியன் ஃபவுண்டேஷன்

### இயக்குநர் உரை:



அனைவருக்கும் வணக்கம்!

தி செரியன் ஃபவுண்டேஷன் தொண்டு நிறுவனம் செயல்படுத்தும் பல்வேறு பணிகளை நமது பணியாளர்களும் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தோம். அதனால் உருவானது தான் இந்த செய்தி மடல். இதை வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். எனவே, நீங்களும் படித்து மகிழுங்கள்.

**திருமதி. வல்சா பெஞ்சமின் செரியன்,**
**இயக்குநர்**
தி செரியன் ஃபவுண்டேஷன்

## முன்னோட்டம் 2012

ஜனவரி





பிப்ரவரி



மார்ச்

ஜீலை



டிசம்பர்





அக்டோபர்





நவம்பர்

## நிறுவனத்தை பற்றி:

The Cherian FOUNDATION

தி செரியன் ஃபவுண்டேஷன் என்பது செரியன் குடும்பத்தினரின் ஒரு தனியார் குடும்ப தொண்டு நிறுவனம்.

இந்நிறுவனத்தின் நோக்கம் "அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய வாய்ப்புகள் இல்லாதவர்களுக்கு வாய்ப்புகளை அமைப்பதே" ஆகும். அவர்கள் வாழ்வில் கல்வி, ஆரோக்கியம் மற்றும் திறன்களை அதிகரிக்க செயல்பட்டு வருவது. இந்த சேவை நிறுவனம், நமது ராஜ் குளோபல் ஹோல்டிங்கில் பணியாளர்களுக்கு மட்டுமல்லாமல், நமது தொழிற்கூடத்தின் அருகில் உள்ள சமுதாயத்திற்கும் பல நன்மைகளை செய்து வருகிறது. இதைத் தவிர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் தொண்டு செய்து வருகிறது.

**இதன் மூன்று முக்கிய அம்சங்களாவது:**

- கல்வி உதவி
- அடிப்படை ஆரோக்கியம்
- விழிப்புணர்வு மற்றும் சமுதாய பங்கேற்பு

மேலும், கூட்டாண்மை சமுக பொறுப்பு பிரிவாகவும் செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பின் மூலமாக ராஜ் குளோபல் ஹோல்டிங்கில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களும் சமூக சேவை செய்ய அடித்தளமாக விளங்குகிறது.

மேலும் விபரங்கள் அறிய, எங்கள் www.cherianfoundation.org என்ற இணைய தளத்தில் அறிந்துக் கொள்ளலாம், அல்லது 044-39278133/34 என்ற தொலை பேசியில் அறிந்துக் கொள்ளலாம்.

# 2012 - ஆம் வருடத்தில் சேவை நிறுவனம் ஆற்றிய பணிகள்:

## ஜனவரி

### பெஞ்சமின் செரியன் ரோட்டரி கிளப் ஆப் மதராஸ் குடியிருப்பு தொகுதி:

நமது மேலாண்மை அறங்காவலர் திரு. பெஞ்சமின் செரியன் அவர்கள் CREATE (Centre for Rural Education , Advancement, Transformation and Empowerment) என்ற ரோட்டரி சங்க திட்டத்திற்கு நன்கொடையாக வழங்கினார். இதன் மூலம் கும்மிடிப்பூண்டியில் அமைந்துள்ள பாய்ஸ் டவுன் மாணவர்களுக்கு குடியிருப்பு வசதி பெரிய அளவில் செய்யப்பட்டது.



புகைப்படம்: பெஞ்சமின் செரியன் ரோட்டரி கிளப் ஆப் மதராஸ் குடியிருப்பு தொகுதி.

இவ்விடுதியில் தங்கும் மாணவர்கள் அனைவரும் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பத்தையும், பலர் சமுதாயத்தால் பல்வேறு விதங்களில் புறக்கணிக்கப்பட்ட வகுப்பையும் சார்ந்தவர்கள்.

## பிப்ரவரி

### எழுத்தறிவு திட்டம்:

எழுத்தறிவுத்திட்டத்தினால் B & H Exports, மற்றும் ராஜ் ஹேர் இன்டர்நேஷனல் பணியாளர்கள் பயன் அடைந்துள்ளார்கள்.

இதில் பங்கேற்கும் பணியாளர்கள் வாரம் ஒருமுறை தமிழ் எழுதப்படிக்க, எண்களை கூட்டல், ATM Card பயன்படுத்துதல்,



புகைப்படம்: அழிஞ்சிவாக்கத்தில் நடைப்பெற்ற வகுப்புகள்.

விடுப்பு கடிதம் எழுதுதல், கையெழுத்து போடுதல், போன்றவற்றைக் கற்றுக் கொள்கிறார்கள். தற்சமயம் 29 பணியாளர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

### பஞ்செட்டி மருத்துவமனையில் நிழற்தாழ்வாரம்:

டாக்டர். ரவேந்திர குமார் அவர்களின் வேண்டுகோளின்படி பஞ்செட்டியில் அமைந்துள்ள அரசு சுகாதார மையத்தில் புறநோயாளிகள் காத்திருக்கும் இடத்தில் நிழற்தாழ்வாரத்தை தி செரியன் ஃபவுண்டேஷன் அமைத்தது.




புகைப்படம்: புறநோயாளிக்கு கட்டப்பட்ட காத்திருக்கும் நிழற்தாழ்வாரம்

இதற்கு தேவையான நிதியுதவியை ராஜ் ஹேர் இன்டர்நேஷனல் வழங்கியது. 780 சதுர அடியில் இக்கூரை அமைக்கப்பட்டது. இதன் மூலம் புறநோயாளிகளுக்கு நிழலும் கிடைக்கிறது, பொது மக்கள் இம்மருத்துவமனையினால் நிறைய பயன் பெறுகிறார்கள். இம்மருத்துவமனையில் சிறப்பாக பணிபுரியும் மருத்துவர்களையும், பணியாளர்களையும் பாராட்டுகிறோம்.

# மார்ச்

## அகில உலக பெண்கள் தினம்:

அகில உலக பெண்கள் தினம் நமது தலைமை அலுவலகத்தில் 10.03.2012, அன்று "Celebrating the Past, Planning for the Future" என்ற தலைப்பில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.




புகைப்படம்: திருமதி. வல்சா பெஞ்சமின் செரியன் இயக்குநர், தலைமை அலுவலகத்தில் உள்ள பெண் ஊழியரிடம் உரையாடல்

பெண் ஊழியர்கள் குறிப்பாக புதியதாக சேர்ந்தவர்களுக்கு பல்வேறு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்கும் பொறுப்பு அளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 2 ஊழியர்கள் கிரண் பேடி, மற்றும் அன்னை தெரசா சாதனைகளை எடுத்துரைத்தார்கள். திருமதி. சித்திரா தியாகராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராக தலைமைத் தாங்கி வேலை இடங்களில் பெண்களின் பங்கு என்ன என்பதைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். திருமதி. விஜயா, பெண்கள் முன்னேற்ற திட்டம் (Women Empowerment Trust), அவர்கள் செயற்கை நகைகள் செய்யும் வழிமுறைகளை விளக்கி காட்டினார். மேலும் போட்டியில் வெற்றிப் பெற்றவர்களுக்கும், lucky Dip-ல் தேர்ந்தெடுக்கப் பட்ட 10 ஊழியர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. திருமதி. வல்சா பெஞ்சமின் செரியன் இயக்குநர் அவர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைந்து நடத்தியவர்களுக்கும் பரிசுகளை வழங்கினார்.

# ஜீலை

## அரசு பள்ளிகளுக்கு 200 நூலகப் புத்தகங்கள்:

இவ்வாண்டு, நமது நிறுவனம் நூலகத்திற்குத் தேவையான 200 புத்தகங்களை இலவசமாக கீழ்க்காணும் பள்ளிகளுக்கு இவ்வருடம் அளித்துள்ளது.

1. ரோட்டரி மாதிரி பள்ளி, முகப்பேர்
2. டாக்டர் ராதாகிருஷ்ணன் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, திருத்தணி
3. அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, திருத்தணி.



புகைப்படம்: Rtn. M. கோவிந்தசாமியிடமிருந்து (செயலாளர், ரோட்டரி திருத்தணி சங்கம்) புத்தகங்களை அரசு பெண்கள் உயர்நிலை பள்ளி, திருத்தணி ஆசிரியை பெற்றுக் கொள்கிறார்.

## இலவச கண் மருத்துவ முகாம்:

இலவச கண் மருத்துவ முகாம் கீழ்க்காணும் இடங்களில் நடைப்பெற்றது:

14.07.2012 அன்று ராஜ் குளோபல் ஹோல்டிங்ஸ்,தி.நகர் இதில் 52 பேர் பயன் பெற்றனர்.



புகைப்படம்: ராஜன் கண் மருத்துவமனை டாக்டர்கள் கண் பரிசோதனை செய்கிறார்கள்.

06.12.2012 அன்று ராஜ் ஹேர் இன்டர்நேஷனல், அழிஞ்சிவாக்கம், இதில் 180 பேர் பயன்பெற்றனர். 45 பணியாளர்களுக்கு மூக்கு கண்ணாடியும், 6 பணியாளர்களுக்கு இலவச கண் புரை அறுவைச் சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

## யோகா பயிற்சி:

உடலும், உள்ளமும் கட்டுக்கோப்புடன் ஆரோக்கியமாக வைக்க உதவும் யோகா உடற்பயிற்சி முதல் முறையாக 14.07.2012 முதல் 18.08.2012 வரை ராஜ் குளோபல் ஹோல்டிங்ஸ், தி. நகரில் உள்ள பணியாளர்களுக்கு முதன் முறையாக கற்பிக்கப்பட்டது. குருஜி. திரு. T.S. நாராயணா (ஆத்ம ஞான யோகா) அவர்களால் 14.07.2012 முதல் 18.08.2012 வரை வாரந்தோறும் சனிக்கிழமைகளில் 1½ மணி நேரம் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் 29 பணியாளர்கள் பயன் அடைந்து, தொடர்ந்து தங்கள் இல்லத்திலும் பயிற்சி செய்து வருகின்றனர்.



புகைப்படம்: பங்கேற்ற ஊழியர்கள் குருஜி. திரு. T.S. நாராயணா அவர்களுடன்

## அக்டோபர்

### 2 ஆம் ஆண்டு விளையாட்டு போட்டிகள்:

ரோட்டரி மாதிரி பள்ளி, முகப்பேரில் பல்வேறு விளையாட்டு போட்டிகள் 10.10.2012, அன்று நடைபெற்றது. 1 ஆம் வகுப்பு முதல் 3 ஆம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு தவளை போல தாவி தாவி ஓடுதல் போட்டியும், 4 ஆம் வகுப்பு முதல் 6 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு டம்ளரில் உள்ள தண்ணீர் கீழே சிந்தாமல் எடுத்து செல்லுதல் போட்டியும், 4 ஆம் வகுப்பு முதல் 6 ஆம் வகுப்பு மாணவிகளுக்கு Lemon and Spoon போட்டியும், 7 ஆம் வகுப்பு மற்றும் 8 ஆம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு நினைவாற்றல் போட்டியும், வைக்கப்பட்டது. திருமதி. வல்சா பெஞ்சமின் செரியன் இயக்குநர், அவர்கள் இப்போட்டிகளுக்கு தலைமை தாங்கி, வெற்றிப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கினார்.



புகைப்படம்: விளையாட்டுப்போட்டியில் மகிழ்ச்சியோடு பங்கேற்றக் குழந்தைகள்

## நவம்பர்

### Schools into Smiles திட்டத்தின் 5 ஆம் ஆண்டு கலை நிகழ்ச்சிகள்:

ரோட்டரி மாவட்டம் 3230 ரோட்டரி நூற்றாண்டு அறக்கட்டளை நிறுவனத்துடன் இணைந்து "Schools into Smiles Cultural Fest 2012" நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இந்த 5ஆம் ஆண்டு சிறப்பு நிகழ்ச்சி சர் முத்தையா செட்டியார் ஆண்கள் மேல் நிலைப் பள்ளியில் 11.11.2012 அன்று நடைபெற்றது. இதில் 243 மாணவ மாணவியர்களும் 36 ஆசிரியர்களும் கலந்துக் கொண்டார்கள். மாறுவேடப் போட்டி, பாட்டுப் போட்டி, குழு நடனம், ஓவியப் போட்டி போன்ற நிகழ்ச்சிகள் தமிழ் கலாச்சாரம் மற்றும் சமூக நல தலைப்புகளில் நடைபெற்றது. மேலும், Rtn. கிறிஸ்டோப்பர் மற்றும் திருமதி. கரினா ஜார்ஜ் செரியன் அவர்கள், ஃபேஷன் ஷோ நடத்தியது இவ்விழாவின் சிறப்பு அம்சமாக அமைந்தது.



புகைப்படம்: MCTM பள்ளியில், குழு நடனம் சிறப்பாக ஆடும் செம்பாச்சி குப்பம் பள்ளியின் 5ஆம் வகுப்பு மாணவிகள்

நமது நிறுவனத்தின் சார்பில் அநேக பணியாளர்கள் இதில் பங்கேற்று, விழா சிறப்பாக நடைபெற உதவியதற்கு எங்களது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

## டிசம்பர்

### "மலிவான பொருட்கள் விற்பனை: (Jumble Sales)"

புதியதாக இவ்வருடம், நலப்பணிகளுக்கான நிதி திரட்டும் நிகழ்ச்சியாக "மலிவான பொருள் விற்பனை / கதம்ப விற்பனை (Jumble Sales)" சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு பல நலம் விரும்பிகள் மற்றும் ஊழியர்கள் துணிகள், விளையாட்டு சாதனங்கள், வீட்டு உபயோக பொருட்கள் போன்றவற்றை நன்கொடையாக வழங்கினார்கள். இதன் மூலம் பணியாளர்கள் நமது நிறுவனத்தின் நலத்திட்டங்களில் பங்கேற்கும் வாய்ப்பை உருவாக்கியுள்ளது. இதில் ரூ. 31,879 நிதி திரட்டப்பட்டுள்ளது.



புகைப்படம்: அழிஞ்சிவாக்கத்தில் மலிவான பொருட்கள் விற்பனை

### பாய்ஸ் டவுன் மாணவர்களுக்கு கிரிக்கெட் கிட்:

நாம் ஆரோக்கியமாக வாழ உடற்பயிற்சி தேவை. உடற்பயிற்சி உடல் வலிமையாகவும், சுறுசுறுப்பாகவும் வைக்க உதவுகிறது, இதை மனதில் கொண்டு கிரிக்கெட் விளையாட்டு சாதனங்களை நமது நிறுவனம், கும்மிடிப்பூண்டியில் அமைந்துள்ள பாய்ஸ் டவுன் மாணவர்களுக்கு வழங்கியது.



புகைப்படம்: திரு. விவேக் பராசர் மற்றும் திரு. பெஞ்சமின் செரியன் பாய்ஸ் டவுன் மாணவர்களுக்கு வழங்கிய விளையாட்டு சாதனங்களை திரு. மகேஷ், திரு. ஆறுமுகம் பெற்றுக் கொண்டார்கள்.

## 9வது ஆண்டு நமது நிறுவனம் தத்தெடுத்த பள்ளிகளில் கிறிஸ்துமஸ் விழா:



புகைப்படம்: ரோட்டரி மாதிரி பள்ளி மாணவர்கள் நடத்திய குறுநாடகம்.

கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு நமது சேவை நிறுவனம் தத்தெடுத்த சமுக சேவா சங்க ஆரம்பப் பள்ளி, (இராணி மேரிக் கல்லூரி வளாகத்திலும்) - ரோட்டரி மாதிரி பள்ளி, (முகப்பேரிலும்), குழந்தைகளுக்கு கேக் வழங்கியது. அன்று, குழந்தைகளின் குறுநாடகங்கள், சிறப்பு பாடல்களுடன் ஒன்பதாவது கிறிஸ்துமஸ் விழா சிறப்பாக நடைப்பெற்றது.

## 31 ஆம் ஆண்டு ராஜ் ஹோல்டிங்கில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாட்டம்:

ஒவ்வொரு ஆண்டும் ஊழியர்கள் மற்றும் பணியாளர்கள் எதிர் நோக்கி காத்துக் கொண்டிருக்கும் நிகழ்ச்சியாகிய "கிறிஸ்துமஸ் விழா". நமது நிறுவனத்தில் 15.12.2012 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது.




வெற்றிபெற்ற வீரர்கள் சுழற்கோப்பை பெறுகிறார்கள்

இதில் ஒருங்கிணைந்து, பொறுப்பேற்று, சிறப்பாக செயல்பட்ட அனைத்து பணியாளர்களுக்கும் நமது தலைவர்கள் பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறார்கள். இதில் பணியாளர்களுக்கு இடையே நடனப்போட்டி, நாடக போட்டி, AD Zap போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளும், மற்றும் Hair Show-வும் சிறப்பாக நடைப்பெற்றது. நிறுவன ஸ்தாபகர்கள் பணியாளர்களுக்கு மதிய உணவு பரிமாறி தங்கள் அன்பை பகிர்ந்துக் கொள்வது இவ்விழாவின் சிறப்பு அம்சம். இவ்வாண்டு நிகழ்ச்சியை ஒருங்கிணைத்த திருமதி. விஜய லஷ்மி அவர்களுக்கு, சிறப்பு பாராட்டுக்கள்.

## பணியாளர்கள் முயற்சிக்கு நன்றி:

தி செரியன் ஃபவுண்டேஷனின் நலப்பணி திட்டங்களுக்கு தன்னார்வத்தோடு ரூ. 10,000 நிதியை கொடுத்த ராஜ் குளோபல் ஹோல்டிங்கின் பணியாளர்களுக்கு நமது நிர்வாகிகள், தலைவர்கள் தங்களது பாராட்டுதல்களை இவ்விதழ் மூலமாகவும் தெரிவித்துக் கொள்கிறார்கள்.




புகைப்படம்: பணியாளர்கள் காசோலை வழங்குதல்

## நமது நிறுவனத்தின் தலைவர்களின் சாதனைகள்:

### திரு. பெஞ்சமின் செரியன், மேலாண்மை அறங்காவலர்

திரு. பெஞ்சமின் செரியன் அவர்கள் முன்னாள் குடியரசு தலைவர் A.P.J அப்துல்கலாம் மற்றும் குடியரசு தலைவர் பிரணாப் முகர்ஜி அவர்களை ரோட்டரி மாவட்டம் 3230வின் மூலமாக சந்தித்து சமுக நலத்திட்டங்களை பற்றி கலந்துரையாடினார். மேலும், இவர், The Plastic Export Promotion (PLEX) council-ல் நிர்வாக குழுவின் Committee of Administration (COA)} அங்கத்தினர் பொறுப்பை ஏற்றுள்ளார்.



புகைப்படம்: இடமிருந்து வலம்: Rtn. மனுலிங்கம், முன்னாள் குடியரசு தலைவர் A.P.J அப்துல்கலாம் மற்றும் திரு. பெஞ்சமின் செரியன்



புகைப்படம்: இடமிருந்து வலம்: குடியரசு தலைவர் பிரணாப் முகர்ஜி, திரு. விஷ்வநாதன், MP, DG.ராஜா சீனிவாசன், Rtn. சுதர்சன்ராவ், Rtn. நந்தகுமார், AG, PDG பெஞ்சமின் செரியன், Rtn.பாலசுப்பிரமணியன்

### திருமதி. வல்சா பெஞ்சமின் செரியன், இயக்குநர்

திருமதி. வல்சா பெஞ்சமின் செரியன் அவர்கள் இரண்டாவது முறையாக இளம் பெண்கள் கிறிஸ்தவ சங்கத்தின் (Young Women Christian Association - YWCA) தலைவராக (President) தேர்ந்தெடுக்கப்பட்டார்.




புகைப்படம்: இயக்குநர் YWCA Madras-ல் கொடி அசைத்து Car Rally தொடங்கி வைத்தார்.

இவர் தலைமையில் சிறப்பாக நடைபெற்ற பல்வேறு நிதி திரட்டும் நிகழ்ச்சியில் ஒன்று CAR Rally என்னும் நிதி திரட்டும் நிகழ்ச்சி. மேலும், இவரது தலைமை பொறுப்பேற்ற ஆண்டில், YWCA சமுதாய கல்லூரியில் படித்த செல்வி. உமா மகேஸ்வரி முதன் முதலாக வெளிநாடு சென்று மேற்படிப்பை பயிலுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டார். செல்வி. உமா நமது ராஜ் ஹேர் இன்டர்நேஷனலில் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. தி செரியன் ஃபவுண்டேஷன் உமாவின் பயணத்திற்கு தேவையான பொருட்களை கொடுத்து உதவியது.

## திரு. ஜார்ஜ் B.செரியன், அறங்காவலர்



திரு. ஜார்ஜ் B. செரியன் அவர்கள் ரோட்டரி மாவட்டம் 3230 வில் உதவி ஆளுநராக பதவியேற்று, 18-ஆம் மண்டலத்தில் 6 ரோட்டரி சங்கத்தை (Club) முன்னின்று வழிநடத்தி வருகிறார். மேலும், Regional Governing Council of Southern Region, 100% EOU & SEZ-லில் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவரது முயற்சியால் சோமங்களத்தில் உள்ள லிட்டில் ஏஞ்சல் பள்ளியில் புதிய வகுப்பறைகள் MMRT- 42 மூலம் கட்டப்பட்டது. இப்பள்ளியில் படிக்கும் மாணவர்கள் அனைவரும் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பத்தை சார்ந்தவர்கள். எனினும் இப்பள்ளி அவர்களுக்கு குறைந்த கட்டணத்தில் ஆங்கில வழிக்கல்வியை அளித்து வருகிறது. இத்திட்டத்தை செயல்படுத்தியதின் மூலம் 550 மாணவர்கள் பயனடைகிறார்கள்.

## திருமதி. கரினா ஜார்ஜ் செரியன், அறங்காவலர்

திருமதி. கரினா ஜார்ஜ் செரியன் அவர்கள், "Schools into Smiles Cultural Fest 2012"-ல் அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களும் ஃபேஷன் ஷோவில் கலந்துக் கொள்ளும் வாய்ப்பினை உருவாக்கினார்.




புகைப்படம்: 18 குழந்தைகள் ஃபேஷன் ஷோவில் கலந்துக்கொண்டனர்.

## திருமதி. சாரா B.செரியன், அறங்காவலர்



பெங்களூரிலிருந்து சென்னைக்கு வந்த திருமதி.சாரா B செரியன் அவர்களையும், அவர்கள் குடும்பத்தினர்களையும் வரவேற்கிறோம்.

ஊழியர்களுக்கும் பணியாளர்களுக்கும் எங்களது நன்றி


RAJ HOLDINGS

RAJ GLOBAL HOLDINGS Pvt. Ltd.

RAJ HAIR INTL Pvt Ltd.

RAJ REDEF MEDIA Pvt. Ltd.

Raj Waterscape Properties Pvt. Ltd.

B & H EXPORTS

RAJ TRADING


நன்கொடை விவரங்கள்:
தங்கள் நன்கொடைகளை "The Cherian Foundation" என்ற பெயரில் காசோலை (Cheque) அல்லது வரைவோலை (Demand Draft) ஆக எடுத்து எங்களுக்கு அனுப்பலாம். தாங்கள் கொடுக்கும் நன்கொடைகள் அனைத்தும், வருமான வரி சட்டத்தின் 80 G பிரிவின் (u/s 80 G of the Income Tax Act vide Certificate No. DIT (E) No.2 (67)/03-04 dated 01.04.2007 Valid till 31.03.2010) கீழ் வரி விலக்கு பெறுகின்றன.
வங்கி கணக்குடையவர் பெயர் : The Cherian Foundation
வங்கி பெயர் மற்றும் கிளை : ICICI Bank, Teynampet
கணக்கு வகை : சேமிப்பு கணக்கு
கணக்கு எண் : 000101212525
ஆர்டிஜிஎஸ் / என்இஎப்டி / ஐஎப்எஸ்சி குறியீடு : ICICI 00000001


**Contact**
38, Malony Road, T. Nagar, Chennai – 600 017,
Ph: 044-39278133 / 34,
projects@cherianfoundation.org,
www.cherianfoundation.org



ஆசிரியர் குழு
திருமதி. வல்சா பெஞ்சமின் செரியன், இயக்குநர்
திருமதி. கரினா ஜார்ஜ் செரியன், அறங்காவலர்
திரு. விஜய் சார்லஸ் வெஸ்லி, திட்ட ஒருங்கிணைப்பாளர்